# சங்க இலக்கியத்தில் சூழலியற் சிந்தனை

**றோ.பெ. றொஷான்,**
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thamiltheepan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சூழலியல் என்பது இன்று வெகுவாக வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். தமிழிலே அறிவியற்றமிழ், கணினித் தமிழ் என்று வளர்ந்து வருகின்ற நிலையிலும் சூழலியல் தொடர்பான சிந்தனைத் துறை இன்னமும் முகிழ்விடத் தொடங்கவில்லை என்றே கூறலாம். சூழலியல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தாவரம், விலங்குகள் பற்றிய அறிவியற் துறையாகும். இத்துறையானது சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான உறவை ஆராயும் ஒரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. சங்க இலக்கியங்கள் பொதுவாகவே முதல், கரு, உரிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு செய்யுளும் ஏதேனும் ஒரு நிலத்தை அல்லது அது சார்ந்த கருப்பொருட்களை பின்புலமாகக் கொண்டே உரிப்பொருளை விளக்குகின்றன. சங்க அகப்பாடல்களில் இக்கருத்தின் ஆதிக்கத்தைத் தெளிவாகக் கண்டுணரலாம். பழந்தமிழரிடத்தே காணப்பட்ட சூழலியல் தொடர்பான சிந்தனையை ஆய்ந்தறிவதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். சூழலியல் என்பது இன்று ஓர் அறிவு சார்ந்த துறையாக வளர்ந்துள்ள போதும் பழந்தமிழரிடத்தே அவ்வாறு அல்லாமல் ஒரு அவதான நிலையில் பயன்பட்டுள்ளமை புலனாகின்றது. இன்று சூழலியல் தொடர்பான சிந்தனையானது மனிதனின் அவசியத் தேவைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதன் விளைவாகவே நிலம், நீர், வளி, ஒலி மற்றும் உணவு மாசடைதல் என இச் சிந்தனைத்துறை அகலக்கால் பதித்துள்ளது. இவ் ஆய்வின் மூலங்களில் குறிப்பாக முதல்நிலைத் தரவுகளாக சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகை எடுத்தாளப்படவுள்ளது. இந்த ஆய்வினூடாகப் பழந்தமிழரின் சூழலியல்சார் சிந்தனைகள் தேடித் தொகுக்கப்படுவதோடு, குறிப்பாக அவற்றிலே நிலம், நீர், வளி, ஒலி மற்றும் உணவு மாசடைதல் தொடர்பாக ஆராய்ந்து அச்சிந்தனைகளைப் பட்டியற்படுத்துவதாக அமையும். இத்தகைய ஆய்வுகள் மூலம் சூழலியற்ச் சிந்தனைகளின் வளர்ச்சியில் அதன் முன்னோடிகளாக (pioneers) தமிழர்கள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கும் சூழலுக்கும் இடையே காணப்பட்ட அந்நியோன்னியத் தொடர்பும் இலக்கிய ஆதாரங்கள் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது பகுப்பாய்வு, விபரண ஆய்வு போன்ற ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழரின் சூழலியற் சிந்தனை வளர்ச்சியிலே அவர்கள் சூழலோடும், இயற்கையோடும் கொண்டிருந்த உறவு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் நிலமாசு, நீர்மாசு, வளிமாசு மற்றும் ஓலிமாசு பற்றிய அவர்களது முன்னுதாரணமான பண்பாடும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறான ஆய்வுகள் தமிழரின் எதிர்வுகூறும் விஞ்ஞானத்தன்மை வாய்ந்த சிந்தனைகளின் புரிதலுக்கும் வழிகோலும் எனலாம்.

***பிரதான சொற்பதங்கள்:*** *சங்க இலக்கியம், சூழலியல், சிந்தனை*

## 1.0. ஆய்வறிமுகம்

தமிழில் அறிவியல் தமிழ் தனித்து வளர்ந்து வரும் நிலையிலும் சூழலியல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் உள்ள தாவரம் மற்றும் உயிரினம் பற்றிய அறிவியலாகும். உயிரினங்களுக்கும், சுற்றுச் சூழல்களுக்கும் இடையிலான உறவுகளை இந்த அறிவியல் ஆராய்கின்றது.

சங்கத் தமிழர் தாம் வாழும் நிலத்தையோ, நிகழும் பொழுதையோ, நிற்கும் செடியையோ எதையுமே தம்முடைய அகவாழ்வுக்குப் புறமாகக் கருதவில்லை. தமிழரின் இத்தகைய சூழலியல் அறிவை இன்றைய சூழலியல் அறிஞர்களின் கூற்றுக்களோடு பொருத்திப்பார்க்கும் ஆய்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

சற்றுச்சூழல் விழிப்புணர்வை இன்று பல அறிவியல் இயக்கங்கள் ஓர் இயக்கமாக ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழரிடத்தே சூழலியல் தொடர்பான சிந்தனைகள் மிகுந்திருந்ததனைச் சங்கப்பாடல்களில் குறிப்பாகக் குநற்தொகையிலே நிறைவாகக் கண்டுணரலாம்.

### 1.1 குறுந்தொகை

குறுந்தொகை என்பது சங்க இலக்கியத்தில் ஒன்றாகும். குறைந்த அடிகளையுடைய பாடல்களை உடையது. 4–8 அடிகள் வரை அமைந்துள்ள பாடல்களைக் குறுந்தொகையிலே காணலாம். தொகை என்ற பெயரால் சங்க இலக்கியத்தில் அமைந்தவை குநற்தொகையும், கலித்தொகையும் ஆகும். அகநானூற்றை நெடுந்தொகை என்றும் அழைப்பர்.

#### 1.1.1 சூழல்

குறிப்பிட்ட இடத்தில் உள்ள தாவரம் மற்றும் விலங்குகள் அனைத்தையும் உள்ளடக்கியதே சூழல் என்பதாகும். சூழல் என்றால் “சுற்றுப்புறம்”[1] என்று கோணார் கையகராதி விளக்கம் தருகின்றது. சூழலை ஆங்கிலத்தில் Environment என்பர். இதன் பொருள் “ The Surroundings In Which A Person, Animal Or Plant Lives. The Natural World.” என Oxford English Mini Dictionary பொருள் தருகின்றது.

சங்கச் செய்யுட்கள் பலவற்றிலும் நிலம், நீர், வளி என்னும் ஐம்பூதங்கள் பற்றிய விளிப்புணர்வும், அறிவுத்தெளிவும் இருந்திருக்கின்றது. இதற்குப் பின்வரும் குறுந்தொகைச் செய்யுள்களைச் சான்றுகாட்டலாம்.

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அளவு இன்றே…”
“நிலம் தொட்டுப் புகாஅர், வானம் ஏறார்
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்…”

என்ற இரு பாடல்களும் சூழல் பற்றிய தெளிவு பழந்தமிழரிடையே நிலவியிருந்தமைக்குச் சான்றாகின்றது.

### 1.2. நிலம் மாசடைதல் பற்றிய சிந்தனை

சூழலில் உயிரினம் வாழ்வதற்கு அடிப்படையானது நிலமாகும். நிலத்தின் இயல்புகளுக்கு ஏற்பவே அவர்களது வாழ்க்கை முறையும் அமைந்திருந்தன. பண்டைத் தமிழரிடையே ‘நானிலம்’ பற்றிய கருத்துக்கள் நிலவியமைக்கு அவர்களது வாழ்க்கை அதனை ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டமையே காரணம் எனலாம். குறுந்தொகைப் பாக்களைப்பாடிய புலவர்களிடத்தே நிலம் மாசடைதல் பற்றிய சிந்தனைகள் இருந்துள்ளன. இதற்கான சான்றுகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். பிரிவுத் துயரால் துன்புறும் தலைவி தனது தோழியிடம் துயரைப் பகிர்ந்து கொள்ளும் வேளையில் தலைவன் சென்ற பாலைவனத்தைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கிறாள்.

“பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்
நிலம்கரி கள்ளி அம்காடு இறந்தோரே”

என்ற பாலைத்திணைப் பாடலிலே அந்நிலம் பாலையானமைக்கு கடும் வெம்மையே காரணம் எனவும், அதன் நிறமும் கரியாகத் திரிபடைந்து போனமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதனைக் காணலாம்.

பிறிதொரு பாடலிலே, தலைவன் பிரிந்து சென்றுவிட்டபின் அவனோடு உடன்போகா நின்று துயருற்ற தலைவிக்குத் தோழி அந்நிலத்தின் கொடுமை கூறி ஆற்றுகிறாள்.

''உமணர் சேர்ந்துகழிந்த மருங்கின் அகன் தலை..''

என்னும் செய்யுளிலே கூட்டமாக உமணர் எனப்படும் உப்புவிற்போர் தமது சகடங்களை ஓட்டிச் செல்வதால் அவ்வழி பாழடைந்துள்ளது என்றும்; பயணம் செய்யமுடியாத நிலையில் உள்ளமையையும் குறிப்பிட்டு நிற்கிறார்.

அது போன்று, தலைவன் தன்னைப் பிரிந்த நிலையில் தலைவி அவனைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலே அப்போது தோழி அவளுக்ககு ஆறுதல் கூறுகின்றாள். கூறுகின்ற போது ''நிலம் தொட்டுப் புகார்'' என்று உரைக்கின்றாள். அதாவது 'சாரணன்' போல் நிலத்தைத் தோண்டி போயிருக்கமாட்டான் என்று கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இதனூடாக நிலத்தை வீணே தோண்டும் சங்கதிகள் இடம்பெற்றிருப்பதனையே இது புலப்படுத்துகின்றது.

### 1.3. நீர் மாசடைதல்

சூழலில் நீர் என்பது இன்றியமையாத ஒன்று வள்ளுவனும் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறியுள்ளார். அந்தவகையில் தமிழரிடத்தே நீர் மாசடைதல் தொடர்பான சிந்தனைகள் இருந்துள்ளமைக்குப் பின்வரும் செய்யுள்களைச் சான்று காட்டலாம்.

யானை தன் தலையிலும், உடலிலும் தானே புழுதியை வாரிக் கொட்டிக்கொள்ளும் இயல்பினையுடையது. இவ்வாறு புழுதியைக் கொண்டிருக்கும் யானையைப் பாகன் தெளிந்த நீரில் புழுதி முழுவதும் நீங்கும்படி கழுவியதாகக் குறுந்தொகை கூறுகன்றது.

''மாசு அறக் கழீஇய யானை போல...''

என்ற அடிகளிலே விலங்குகளைப் பொதுவான நீரூற்றில் நீராட்டுவதன் மூலம் நீர் மாசடைகிறது. இதனைச் சுற்றுச்சூழல் சார்ந்து சிந்தித்ததன் விளைவு என்றே கூறலாம்.

பிறிதொரு பாடலில் தலைவியைப் பிரிந்து வாழும் தலைவன் தான் வாழும் சூழலை விபரிக்கிறான். அதாவது வேட்டை நாய்கள் தமக்கேற்ற இரையைத் தேடிப்பிடித்து உண்டபின் மச்சங்களை நீரிலே போட்டுவிடுவதனால் நீர் நிலைகள் நாற்றம் எடுத்துக் காணப்படுகின்றன. இத்தகைய சூழலில் தலைவியைக் கூட்டி வராமை நன்மையானதே என எண்ணுவதாகப் பின்வரும் பாடல் அமைகின்றது.

''வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சில்நீர்...''

மேற்கூறப்பட்ட செய்யுளிலே மிகத் தெளிவாக நீர்மாசடைதல் பற்றிய செய்தி; அதிலும் குறிப்பாக 'சில்நீர்' என்ற பதத்தினூடாக அவனிருந்த சூழலிலே காணப்பட்ட சில நீர்நிலைகளில் இந்நிலைமை இருந்துள்ளமை தெளிவாகின்றது.

இவ்வாறு நோக்கும் போது மேலே சான்று காட்டப்பட்ட இரு பாடல்களும் பழந்தமிழரிடையே காணப்பட்ட நீர் மாசடைதல் தொடர்பான எண்ணப்பாங்கிற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாய் அமைந்துள்ளன எனலாம்.

**1.4. வளி மாசடைதல்**

உயிரினங்களின் உயிர்வாழ்வுக்கு மிகவும் அவசியமானது காற்று ஆகும். காற்றின் அவசியம், முக்கியத்துவம், வகைகள் என்பன இன்றைய விஞ்ஞான யுகத்தில் நன்கு ஆராயப்படுகின்றன. இதனால்தான் இன்று 'ஓசோன் துவாரம்', 'அமில மழை', 'ஒட்சிசனின் அவசியம்' போன்றவை பற்றிய விளிப்புணர்வு மொழி, இனம், தேசம் தாண்டி உலகளாவிய ரீதியிலே அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எதுஎவ்வாறாயினும் பழந்தமிழரிடையே காற்றுத் தொர்பான சிந்தனைகள் இருந்துள்ளன.

வேட்டை நாய்களால் உண்ணப்பட்டு எஞ்சிய மீகுதிகள் நீரில் கலந்து நீர் மாசடைந்தது என்று மேலே சான்று காட்டப்பட்டுள்ள செய்யுளிலே வளிமாசடைதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனில் நீர் நிலைகள் நாற்றம் எடுத்தது என்றும் அந்த நாற்றம் எங்கும் நிலவியது தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது.

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சில்நீர்…"

என்பதிலே 'மொய்த்த' என்ற சொல்லிற்கு துர்நாற்றம் என்பது பொருள். அந்தவகையில் காற்று மாசடைவது தொடர்பான அறிவு அக்காலத் தமிழரிடையே நிலவியுள்ளமையைக் காணலாம்.

மேலும், மற்றுமொரு குறுந்தொகைச் செய்யுளானது தோழி கூற்றாக அமைந்துள்ளது. அதிலே தலைவனை நோக்கித் தோழி உரைக்கும் போது, புலால் நாற்றம் வீசுகின்ற கடற்கரையை அண்டிய சோலையை உடைய ஊரே எமது ஊர். அங்குதான் தலைவி உம்மை நினைத்து துயருறுகிறாள் என்று கூறுவதனைக் காணவாம்.

" இவளே…
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணை எம் சிறுநல் ஊரே"

என்னும் செய்யுளிலே 'புலவுத்திரை' என்பதனூடாக புலால் நாற்றம் வீசும் அலைகளை உடைய கடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளதனைக் காணலாம்.

மரம் வெட்டுதல் தொடர்பான கருத்துக்களும் குறுந்தொகையிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. மரம் வெட்டுவது குறிப்பாக காடழிப்பு என்பது வளிமாசுறுவதற்கு வாய்ப்பான ஒன்று. அந்தவகையில் மரம் வெட்டும் தொழிலைச் செய்வோர், மரம் வெட்டப்பட்டு காடழிக்கப்படும் காட்சியைப் பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

"மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும்.."

என்ற செய்யுளிலே 'மரங்கொல்' என்ற பதமானது மரத்தைக் கொல்லுதல் அதாவது வெட்டுதல் எனப் பொருள்படும். உயிரினங்களில் இரத்தமுடையனவற்றையே 'கொல்லுதல்' எனக் கூறுவர். ஆயினும் பழந்தமிழர்

இயற்கையோடு கொண்டிருந்த நெருக்கத்தினால் மரத்தைக் கொல்லும் தொழிலைச் செய்பவன் என்று அழைக்கிறார். இதனூடாக காடழிப்பபுத் தொடர்பில் புலவன் கொண்டிருந்த எதிர்வினை எண்ணம் புலப்பட்டு நிற்கிறதெனலாம்.

இதே கருத்தை வலியுறுத்துவதாக மற்றுமொரு பாடல் அமைந்துள்ளது.

''யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்..''

என்ற பாடலடியிலே 'யாஅம் கொன்ற' – யாமரத்தை வெட்டிய, 'மரம் சுட்ட இயவில்' – மரங்களைச் சுட்ட வழியில் என்று பொருள்பெற்று வந்துள்ளது. இச் செய்யுளிலும் 'கொல்லுதல்' என்பது வெட்டுதல் என்பதற்கு ஈடாகப் பயன்பட்டுள்ளமை புலனாகின்றது.

**1.5. ஒலி மாசடைதல்**

ஒலி (sound) என்பது இயற்கை ஒலி, பேச்சு, இசை என்ற வகையிலே எடுத்துக்கொள்ளலாம். இந்த ஒலியானது எவ்வாறு அல்லது எப்போது மாசடைகின்றது என்றால்; ஓர் உயிரினம் எழுப்பும் ஒலியானது பிற உயிரினங்களின் நடத்தைக் கோலங்களில் தாக்கத்தை வலிந்து ஏற்படுத்துமாயின் அதனையே ஒலி மாசடைதலாகக் கருதலாம். குறுந்தொகைச் செய்யுட்களில் ஒலி மாசுறுவதனைப் பற்றிய சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.

ஆரியர் கூத்தர் கயிற்றின் மேலே நின்று ஆடும் போது பறை கொட்டுகிறார்கள். பறையால் எழும் ஓசையைப் பாலைவனத்திலே எழும் சுழல் காற்றின் ஓசைக்கு ஒப்பிடுகிறார். இவை இரண்டினதும் பேரிரைச்சல் அச்சத்தையும், கலக்கத்தையும் ஏற்படுத்துவதாக விபரிக்கிறார்.

''... ஆரியர்
கயிறு ஆடு பறையின் கால் பொரக் கலங்கி
வாகை வெண் நெற்று ஒலிக்கும்.''

என்ற செய்யுளிலே பறை ஓசையின் அதிர்வினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றம்; குறிப்பாக ஒலிமாசடைதல் கூறப்பட்டுள்ளதனைக் காணலாம்.

தலைவன் பொருள்வயிற் பிரிய எண்ணியுள்ளான் என்பதை அறிந்த தலைவி தோழியை நோக்கி, பாலைவன வழிகள் கொடுமையானது எனத் தெரிந்தும் அவர் என்னைப் பிரிய நினைப்பது ஒருவரிடமும் அருள் இல்லாமையின் விளைவே எனக் கூறுகிறாள். கூறுமிடத்து பாலைவனத்திலே முட்களை உடைய கள்ளிச் செடியின் காய்வெடிக்கும் சத்தம் கேட்டு சோடிப் புறாக்கள் பறக்கும் என உரைக்கிறாள்.

''பெயன்மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் றூவித் துணைப்புற விரிக்கும்''

என்னும் செய்யுளிலே, இணை விளைச்சியில் ஈடுபடும் புறாக்கள் கள்ளிக் காயின் அரவங்கேட்டுப் பிரிந்தன என்று கூறப்படுகின்றது.

இதனூடாகப் புலவனுக்கு ஒலி பற்றிய எண்ணமும், சிந்தனையும் உயர்வாக இருந்திருக்க வேண்டும். இதன் காரணமாகவே நுண்ணிய ஒலிக்குறிப்பையும் பதிவு செய்துள்ளான் எனலாம். அதுபோலவே

''மணி மருள் பூவின் பாடு நனி கேட்டே...''

என்ற பிறிதொரு செய்யுளிலும் நுண்ணிய ஒலிக்குறிப்பைப் பதிவு செய்துள்ளார்.

**1.6. உணவு மாசடைதல்**

இன்றைய கால கட்டத்தில் ஒருவேளை உணவின்றி மத்திய ஆபிரிக்க நாடுகளிலே பலர் மடிந்து போவதனைக் காண்கின்றோம். உணவுமசடைதலிலே மிக முக்கியமான பிரச்சினைகளாக உணவை வீணடித்தல், வீண்விரயம் செய்தல், மிகை உணவுப் பழக்கவழக்கங்களைக் குறிப்பிடலாம்.

தகுந்த முறையிலே உணவைச் சேகரித்தலும், பாதுகாத்தலும், பயன்படுத்துதலும் உணவுப் பண்பாட்டில் மிக முக்கியமானவை. இத்தகைய சிந்தனைகள் பழந்தமிழரிடத்தே இருந்துள்ளமைக்குப் பல்வேறு குறுந்தொகைச் செய்யுட்களைச் சான்றாகக் காட்டலாம்.

தலைவியின் அழகு வீணாகுகின்றது என்பதற்கு உவமை கூறவிழைந்த புலவன் பின்வருமாறு விபரித்துள்ளான். நல்ல பசுவின் இனிமையான பாலானது அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல், கறக்கும் பாத்திரத்திலும் விழாமல் தரையிற் சிந்தி வீணாகிப் போவதாக வருந்துகிறார்.

‘‘கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்துக்கா அங்கு…’’

மற்றுமொரு பாடலிலே, வேலன் வெறியாடும் களத்திலே செந் நெல்லின் வெண்மையான பொரி எங்கனும் சிதறி இருந்த செய்தியைக் கூறுகின்றது.

‘‘வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறியன்ன..’’

என்ற பாடலிலும் இச்சிந்தனை வெளிப்பட்டிருப்பதனைக் காணலாம்.

பிறிதொரு செய்யுளிலே தாய் அடைகாக்காத முட்டை வீணாகம் செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது.

‘‘யாவது மறிகிலர் கழறுவோரே
தாயின் முட்டை போலவுட்கிடந்து’’

என்னும் செய்யுளிலே முட்டை ஒன்றில் உணவாக வேண்டும் அல்லது தாயினால் அடைகாக்கப்பட வேண்டும். இவ்விரு நிலையிலும் பயன்படாது போயின் அது வீணாகிப் போகும் நிலையை எடுத்துக் கூறுகின்றது.

மற்றொரு குறுந்தொகைச் செய்யுளிலே உமணர் சகடத்திலே உப்பை நிறைத்து வருகின்றனர். உப்பால் நிறைந்திருந்த சகடம் கொட்டும் மழையில் ஒட்ட நனைந்து கரைந்துவிட்ட செய்தியினைப் பதிவு செய்துள்ளது.

‘‘அருங்கரை நின்ற உப்புஓய் சகடம்
பெரும்பெயல் தலையவீஇற் தாங்கு’’

மேலும், மற்றுமொரு பாடலிலே, வேலன் வெறியாடும் களத்திலே செந் நெல்லின் வெண்மையான பொரி எங்கனும் சிதறி இருந்த செய்தியைக் கூறுகின்றது.

“வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறியன்ன..”[19]

என்ற பாடலிலும் இச்சிந்தனை வெளிப்பட்டிருப்பதனைக் காணலாம்.

பிறிதொரு செய்யுளிலே தாய் அடைகாக்காத முட்டை வீணாகம் செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது.

“யாவது மறிகிலர் கழறுவோரே
தாயின் முட்டை போலவுட்கிடந்து”[20]

என்னும் செய்யுளிலே முட்டை ஒன்றில் உணவாக வேண்டும் அல்லது தாயினால் அடைகாக்கப்பட வேண்டும். இவ்விரு நிலையிலும் பயன்படாது போயின் அது வீணாகிப் போகும் நிலையை எடுத்துக் கூறுகின்றது.

மற்றொரு குறுந்தொகைச் செய்யுளிலே உமணர் சகடத்திலே உப்பை நிறைத்து வருகின்றனர். உப்பால் நிறைந்திருந்த சகடம் கொட்டும் மழையில் ஓட்ட நனைந்து கரைந்துவிட்ட செய்தியினைப் பதிவு செய்துள்ளது.

“அருங்கரை நின்ற உப்புலூய் சகடம்
பெரும்பெயல் தலையவீஇற் தாங்கு”[21]

மேலும், பாணர் தாம் பிடித்த பச்சை மீனைப் பெரிய அகன்ற வாயினை உடைய மண்பாத்திரத்திலே இட்டுவைப்பர். ஆனால் இவர்கள் அதை மறந்த நிலையில் அது கெட்டு வேறொன்றுக்கும் பயன்படாத நிலையை அடைவதனைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

“பாணர்,
பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புலவு ஆகி..”[22]

என்ற செய்யுளும் உணவு மாசடைவது தொடர்பாகச் சிந்தனைமுறை வளர்ச்சி அடைந்திருந்தது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது எனலாம்.

## 1.7. தொகுப்புரை

சங்க இலக்கியத்தில் சூழலியல் சிந்தனை என்று ஆராய்ந்த போது பண்டைத் தமிழர் தம்மைச் சுற்றியிருந்த சூழலை நன்கு அவதானித்து அதனைத் தமது செய்யுட்களில் பதிவு செய்து சென்றுள்ளமையைக் காணலாம்.

குறுந்தொகைப் பாக்களில் பழந்தமிழ்ப் புலவர்கள் நிலம், நீர், வளி, ஒலி மற்றும் உணவு மாசடைதல் குறித்த தமது மனப்பதிவுகளையும், சூழல் மட்டிலே அவர்களிடத்தே இருந்த விழிப்புணர்வையும் பல அகச்சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

பண்டைத் தமிழர் மத்தியிலே காணப்பட்ட சிந்தனைகள் ஏனைய இலக்கியப் பனுவல்களை ஆதாரமாகக் கொண்டு நுணுகி ஆராயப்பட வேண்டும். அவ்வாறு ஆராயப்படுவதன் மூலம் முன்னோரின் அறிவியல் சார் சிந்தனைகள் வெளிக்கொணரப் படுவதோடு, சூழல்சார் பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுத்தரும் என நம்பலாம்.